மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி),

தஞ்சாவூர்-05

நாள்: 11.08.2022

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி 11.08.2022, காலை 9.30 மணி அளவில் மன்னர் சரபோஜி அரசுக்கல்லூரியில் போதைப்பொருட்கள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மாணவர்களுக்கு இடையே போதைப்பொருள் பற்றியும் அதனை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. நமது நாட்டில் நாளுக்கு நாள் போதை பொருட்களின் பயன்பாடு, இளம்பருவத்தினரிடம் அதிகரித்துக்கொண்டே உள்ளது. இளம்பருவத்தினர் தற்காலிகமாக ஏற்படும் போதைக்காகவும்,மேலும் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படுத்த ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அதனுடைய பின்விளைவுகள் பற்றிய புரிதல் அவர்களிடத்தில் காணப்படுவதில்லை. இந்த போதைப்பொருட்கள் கல்லீரல், மூளை மற்றும் நரம்பு மண்டலத்தை பாதித்து அகால மரணத்தை உண்டாக்கும் சக்திவாய்ந்தவை. மேலும், அனுபவரீதியாகவும் சட்டரீதியாகவும் ஏற்படும் விளைவுகள் பற்றி தஞ்சாவூர் மாவட்ட இணையவழி குற்றத் தடுப்புப் பிரிவுக் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு D.சுவாமிநாதன் மற்றும் இணையவழி குற்றத் தடுப்புப் பிரிவு கண்காணிப்பாளர் திரு S. கார்த்திகேயன் அவர்களும் எடுத்துரைத்து மாணவர்களிடத்தில் கலந்துரையாடினர். இறுதியில் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி த.ரோசி அவர்கள் இந்நிகழ்வில் பங்குபெற்ற மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியினை கல்லூரி இணைய வழி குற்றத்தடுப்பு ஒருங்கினைப்பாளர் முனைவர்.க.மோகன்குமார் கணினித்துறை தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்தார்.







